# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஞானோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2007, ஒகத்து 3 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஞானோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட். 15/2005

## ஞானோதய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"ஞானோதய மன்றம்" என்றழைக்கப்படுவதும், அறியப்படுவது மான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட எல்லாக் குறிக் கோள்களையும், அத்துடன் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென வேதர, பொல்கஸ்ஓவிற்ற என்னுமிடத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாயிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, ஞானோதய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஞானோதய மன்றத்தில் தற்போதைய உறுப்பினராகவுள்ள அல் லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஞானோதய மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டி ணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப் பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாமென்பதோடு, அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஞானோதய மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும், முழுத்தத்துவமும், அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) அநாதை இல்லங்களையும், வயோதிபர் இல்லங்களையும், சமூக நலன்புரி நிலையங்களையும் தாபித்தலும், பேணுதலும் ;

(ஆ) வறியோர், ஆதரவற்றோர் அத்துடன் நோயாளர்களுக்கு வைத்திய உதவி, உணவு அத்துடன் உறைவிடங்களை வழங்குதல் ;

(இ) குருடர், ஊமை, செவிடர் மற்றும் அங்கவீனர்களுக்கான நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை அனுமதிப்பதன் மூலம் அல்லது காசாக அல்லது வேறு வகையாக நிதி உதவியளித்தல் ;

(உ) நூலகங்களை தாபித்தலும், கொண்டுநடாத்துதலும், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் மற்றும் பருவ வெளியீடுகள் முதலியவற்றுக்கு ஒப்பப்பணம் செலுத்துதலும், அத்துடன் அவைகளை வழங்குதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்த விரும்பத்தக்கதாகத் தோன்றுகின்றவாறான அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ஊ) தேவையிலுள்ள மாணவர்களுக்கு கண்காட்சிகள், சொற்பொழிவுகள், மாநாடுகள், தத்துவக் கருத்தரங்குகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், சம்மேளனங்கள், சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது மாணவர்களுக்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறேதேனும் நடவடிக்கைகளை

ஊக்குவித்தல், முறைப்படுத்தல், ஏற்பாடு செய்தல் அத்துடன் நடாத்துதல் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் மன்றங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத் தலும் கூட்டிணைத்தலும்.

கூட்டுத்தாப னத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதே னும் சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத் தக்கவாறான எத்தகையனவையுமான அத்தகைய எல்லாச் செயல் களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவ முடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்கு களைத் தொடங்கவும், பராமரிக்கவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், சேகரிக்கவும் அதன் நிதியங்களை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர் களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், பிரதித் தலைவர்கள், உபதலைவர்கள் இருவர், செயலாளர், உதவிச் செய லாளர் இருவர், கௌரவ பொருளாளர், பணிப்பாளர் நாயகம் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிக்கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேருக்குக் குறையாத வேறு உறுப்பினர்களைக் கொண்ட நிருவாக சபையொன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும், கூட்டுத்தாப னத்தின் அத்தகைய விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிருவாகச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று, ஞானோதய மன்றத் தின் நிருவாகச் சபையில் உறுப்பினர்களாகவிருந்த உறுப்பினர் களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) காலத்திற்குக் காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாத பெரும்பான்மைகொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களின் பாகுபாடும், அவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும், அவர்கள் பதவி விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், ஒழுக்கமும், கடமைகளும் ;

(இ) பதவி தாங்குநர்களைத் தவிர்ந்த முகாமைச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும், அவர்களின் பதவிக் காலமும், முகாமைச் சபையின் தத்துவங்களும், ஒழுக்கமும் கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர் என்போரின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும் ;

(உ) முகாமைச் சபையின் கூட்டங்களில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் கருமமாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும், ; அத்துடன்

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் (1) ஆம் உட்பிரிவின் விதியொன்று என்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்குச் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, பொறுப்புகள், நன்கொடைகள், சேகரிப்புநிதிகள் அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நிருவாகச் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில், கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமாகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் செயற்படுத்துவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது—

(i) இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக வுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தி னால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற் பாலனவையும், மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவையு மான கடன்கள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாப னத்தினால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், மன்றத்திற்குக் கிடைக்கவேண்டிய எல்லாக் கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட லும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்க லாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறே தேனும் விதமாக உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலு டையதாகவும் இயலுமானதாகவும் இருத்தல் வேண்டுமென்பது டன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கும் கூட்டுத்தாபன விதிகளுக் கும் அமைய கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும்

வேண்டும். அத்துடன் அந்த ஆதனங்களை விற்கவும், ஈடுவைக்க வும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக் கொள்ளவும் அல்லது வேறுவகையில் கையாளவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது ஏதேனும் சான்றுப்பத்திரத்திலிடப்படுவதற்குத் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிட வேண்டிய கூட்டுத்தாபனத்தின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையில் அன்றி, எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அப்படி கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஒருவர் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

*கலைப்பின்போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புகள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருந்தால், அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிறநிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின் கொடுத்தல் வேண்டும் அல்லது கைமாற்றுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தைக் கலைக்கும் நேரத்தில் அல்லது அதனைக் கலைக்கும் முன்னர் அத்தகைய நிறுவனத்தை அல்லது நிறுவனங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளைப் பங்கப்படுத்துவதாகவோ, பாதிப்பதாகவோ இருத்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*